[986 நவம்பர் 20]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கேள்வி? வட ஆற்காடு மாவட்டம் ஆரணியிலே வீடுகள் கட்டுகின்ற திட்டம் பற்றியது. இன்னொரு உறுப்பினர் போட்ட கேள்வியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'ஒசி' கேள்விக் கேட்காமல் தனிக் கேள்வி போடவும்.

சேலம் மாவட்டம் ஓமலூரில் விசைத்தறிக் கூடம்.

112—(*வினா எண். 10084) திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஓமலூரில் விசைத் தறிக் கூடம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

அனாதை இல்லங்களுக்கு அரசு அங்கீகாரம் வழங்கல்.

113—(*வினா எண். 4961) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனிப்பட்டவர்கள் அல்லது நிறுவனங்கள் நடத்தும் அனாதை இல்லங்களுக்கு அரசு அங்கீகாரம் எந்த அடிப்படையில் அளிக்கப்படுகிறது ?

(ஆ) எந்த அடிப்படையில் அதற்கான மானியம் வழங்கப் படுகிறது ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தனிப்பட்டவர்கள் அல்லது நிறுவனங்கள் நடத்தும் அனாதை இல்லங்களுக்கு அரசு அங்கீகாரம் அளிப்பதில்லை,

(ஆ) அரசு மானியம் பெற, சமூக நல தொண்டு நிறுவனங்கள் 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதாக இருக்கவேண்டும். பொது டிரஸ்ட் நிறுவனமாயின், அமலில் உள்ள ஏதாவது ஒரு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். மேலும் அந்நிறுவனம் குறைந்தது 5 ஆண்டுகள் சமூக நலச் சேவையில் ஈடுபட்டுள்ளதாக இருக்கவேண்டும்,

[1986 நவம்பர் 20

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாநிலம் முழுவதும் எத்தனை தொண்டு நிறுவனங்கள் இப்படி பதிவு செய்து மாநில அரசினுடைய மானியங்களைப் பெற்று வருகின்றன? இப்படிப்பட்ட நிறுவனங்கள் அனாதை இல்லங்கள் மூலம் மாநிலம் முழுவதும் எத்தனை பேர்கள் பயன் பெறுகிறார்கள் என்ற விவரம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது போன்ற சமூக தொண்டு நிறுவனங்களுக்கு 1-4-1979-லிருந்து மாநில அரசு 45 விழுக்காடும் மத்திய அரசு 45 விழுக்காடும் கொடுக்கின்றது. மீதமுள்ள 10 விழுக்காடு செலவுத் தொகையை அந்த நிறுவனங்களே ஏற்கின்றன. 1-4-1979-க்கு முன்னர் அனுமதிக்கப்பட்ட இல்லங்களுக்கு செலவுத் தொகையில் 90 விழுக்காடும் மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது. அதுபோல தமிழகத்திலே 159 நிறுவனங்கள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் 11,830 ஆதரவற்ற குழந்தைகள் பயன் பெறுகின்றார்கள்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகத் தொண்டு நிறுவனங்கள் இதுபோன்ற ஆதரவற்ற அனாதை நெஞ்சங்களுக்கு உதவி செய்யும் அதே நேரத்தில் இந்த நிறுவனங்கள் அரசின் உதவியை பெற ஏதாவது விதிகள், வரையறைகள் அரசால் விதிக்கப்பட்டுள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மானியம் பெற வேண்டுமானால் சமூகத் தொண்டு நிறுவனங்கள் கீழ்க்கண்ட விதிகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும்:—

1. நிறுவனம் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டதாகவோ முறைப்படி நிறுவப்படக் கூடியதாகவோ இருக்கவேண்டும்.

2. நிறுவனம் குறைந்தது 5 ஆண்டு காலம் சமூக நலத் தொண்டில் ஈடுபட்டிருக்கவேண்டும்.

3. இந்திய அரசியல் அமைப்பில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள், கடமைகள், பொறுப்புகள் உடைய நிர்வாக அமைப்பாக இருக்கவேண்டும்,

4. குறிப்பிட்ட சாதி, சமய சார்பு உடையதாக இருக்கக் கூடாது. அனைத்துப் பிரிவினருக்கும் சேவை செய்ய வேண்டும்.

5. தனிப்பட்ட ஒரு லட்சியத்திற்காகவோ சொந்த லாபத்திற்காகவோ நடத்தக் கூடாது.

1986 நவம்பர் 20]

6. எந்தத் திட்டத்திற்காக மானியம் கேட்கிறார்களோ அத்திட்டத்தை நிறைவேற்ற போதுமான ஊழியர்களையும் வசதிகளையும் மற்றும் நிர்வாக திறமையுடையவர்களாகவும் இருக்க வேண்டும். அரசிடமிருந்து பெறுகின்ற மானியத்தைத் தவிர கூடுதலாக செலவு ஏற்பட்டாலும் அதை ஏற்று செலவு செய்யும் வகையில் நிர்வாகத்தை நடத்தும் அளவுக்கு நிறுவனம் இருக்க வேண்டும். தேவைப்படின் அவர்கள் சொந்தப் பொறுப்பில் நிறுவனத்தை நடத்தவும் தயாராக இருக்க வேண்டும். நிறுவனத்தை நேரில் சென்று பார்வையிட்டு மேற்கண்ட நிபந்தனைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருந்தால் மாவட்ட சமூக நல அதிகாரியின் சான்று அளிக்கப்பட்டு அதற்கு பிறகு தான் மானியம் வழங்கப்படுகிறது.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனாதை இல்லங்களின் மூலமாக குழந்தைகள் வெளிநாடுகளுக்கு கடத்தப்படுகிறார்கள் என்று புகார் வந்திருக்கிறதே, அதுபற்றி அரசுக்கு தகவல் வந்துள்ளதா? இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அனாதை இல்லங்களுக்கு வழங்கப்படும் மானியங்கள் முறையாக செலவு செய்யப்படுகின்றனவா என்று கண்டறிய சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்றை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசின் அங்கீகாரம் பெற்ற சமூக நல நிறுவனங்களின் மூலமாக குழந்தைகள் வெளிநாடுகளுக்கு கடத்தப்படுவதாக எந்தத் தகவலும் அரசுக்கு வரவில்லை. அடுத்து, உதவிப் பெறும் சமூகத் தொண்டு நிறுவனங்கள் முறையாக செயல்படுகின்றனவா என்று அரசு அதிகாரிகள் ஒவ்வோர் ஆண்டும் நேரில் சென்று பார்வையிட்டு அதற்குரிய சான்றிதழை வழங்குகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேளிக்கை வரிச் சட்டம்.

114—(*வினா எண். 8521) திரு. செ. செம்மலை: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேளிக்கை வரிச் சட்டத்தின்கீழ் கேளிக்கை வரி ஏய்ப்பவர்களைப் பற்றி தகவல் கொடுப்பவர்களுக்கு சன்மானம் வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், 1984-85-ம் ஆண்டு எத்தனை பேருக்கு அப்படிப்பட்ட சன்மானம் வழங்கப்பட்டது?